# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 3 | செய்தி மடல் | எண் : 3

அக்டோபர் - டிசம்பர் 2018



**முதன்மை ஆசிரியர்**

முனைவர் **நி.கு. சுதீப்குமார்**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

**ஆசிரியர்**

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

**ஆசிரியர் குழு**

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **பெ. முருகன்**
திரு. **கோ.ரா. புஷ்பநாதன்**
மருத்துவர் **சி. கதிர்வேலன்**
முனைவர் **சி. பால்பாண்டி**
முனைவர் **மா. டெய்சி**




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிசோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வகையான பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், கண்காட்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் வயல் விழாவினை நடத்தியது. அக்டோபர் முதல் டிசம்பர் 2018 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**உழவர் திருவிழா - 2018**





நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையமும், நாமக்கல் மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையும் இணைந்து விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்கும் தொழில்நுட்பங்கள் அடங்கிய கருத்தரங்கு மற்றும் கண்காட்சியினை 26.12.2018 முதல் 28.12.2018 வரை நாமக்கல் பரமத்தி ரோட்டில் அமைந்துள்ள பாவை மஹாலில் நடத்தியது. இந்நிகழ்ச்சியினை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம் அவர்கள் தொடங்கி வைத்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பி. மோகன், பி.ஜி.பி. வேளாண்மை அறிவியல் நிலைய கல்லூரி முதல்வர் முனைவர் என்.ஓ. கோபால், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு. ஜே. சேகர் அவர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியில் வாழ்த்துரை வழங்கினார்கள். சென்னை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இணை அரசுத்துறைகள், விவசாய தொழில் முனைவோர்கள், வெற்றி பெற்ற விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார் வேளாண் ஆலோசனை வழங்கும் நிறுவனங்களிலுள்ள வேளாண் மற்றும் ஏனைய துறைகளிலுள்ள புதிய தொழில்நுட்பங்களை கொண்டு 55 அரங்குகளை இக்கண்காட்சியில் அமைத்திருந்தது.

மேலும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் கருத்தரங்கில் வி.பி.எஸ். தேனீ பண்ணை உரிமையாளர் முனைவர் எஸ். ஜோஸ்பின் அவர்கள் கலந்து கொண்டு தேனீ வளர்ப்பு குறித்த தொழில்நுட்பங்களையும், தருமபுரி சிறுதானியங்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை சார்ந்த திரு. ஆர். சிவலிங்கம் அவர்கள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் பற்றியும், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வளங்குன்றா அங்கக வேளாண்மைத்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஈ. சோமசுந்தரம் அவர்கள் அங்கக வேளாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றியும், சென்னை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக கால்நடை அறிவியல் பயன்பாடுகள் பரிமாற்றத்தளம் துறை சார்ந்த உதவிப் பேராசிரியர் முனைவர் நா.பா. அரவிந்தபாபு அவர்கள் கால்நடை வளர்ப்பில் நவீன தொழில் நுட்பங்கள் பற்றியும், தருமபுரி மீன்வளத்துறை துணை இயக்குநர் திருமதி. பெ. ஜெனீபர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கேற்ப மீன் வளர்ப்பு முறைகள் மற்றும் அரசு

திட்டங்கள் குறித்தும், ஆழியாரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தென்னை ஆராய்ச்சி நிலைய உதவிப்பேராசிரியர் முனைவர் எஸ். அழகர் அவர்கள் தென்னையில் வரும் பூச்சி மற்றும் நோய்கள் பற்றியும் அவற்றின் மேலாண்மை குறித்தும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய தீவனபகுப்பாய்வு மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வக பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ. நடராஜன் அவர்கள் பருவநிலை மாற்றத்திற்கேற்ற வானிலை வேளாண் செய்திகள் குறித்தும் தொழில்நுட்ப உரைகள் வழங்கினார்கள்.

விவசாயிகளுடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், மீன் வளத்துறை இணை இயக்குநர் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மக்காச்சோளத்தில் படைப்புழு தாக்குதல், ஆமணக்கு நிலக்கடலைக்கேற்ற மாற்றுப்பயிர், கால்நடை நோய் மேலாண்மை மற்றும் மீன் வகைகள் குறித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்கள்.

விழாவின் நிறைவு நாளன்று மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை அமைச்சர் மருத்துவர் வி. சரோஜா அவர்கள் கலந்து கொண்டு விழா பேருரையாற்றி நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தை சார்ந்த 10 விவசாயிகளை விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார். இவ்விழாவில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் மற்றும் நாமக்கல் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மொத்தமாக 2635 விவசாயிகள், மாணவர்கள் மற்றும் களப்பணியாளர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**உலக மண்வள தினம் - 2018**




நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக மண்வள தினம் 2018 05.12.2018 அன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியினை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம் அவர்கள் தொடங்கி வைத்து விவசாயிகளுக்கு மண்வள மற்றும் நீர்வள அட்டைகளை வழங்கினார். நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அவர்கள் இக்கூட்டத்தை வரவேற்று உலக மண்வள தினத்தை பற்றி எடுத்துரைத்தார். நாமக்கல் மாவட்ட வேளாண்மைதுறை இணை இயக்குநர் திரு. ஜே. சேகர் அவர்கள், துணை இயக்குநர் திரு. பெ. அசோகன், உதவி இயக்குநர் திருமதி பி. கவிதா அவர்கள் கலந்து கொண்டு நிலையான மண்வளத்தை பெற கடைபிடிக்க வேண்டிய மேலாண்மை முறைகளை பற்றி எடுத்துரைத்தார்கள். தொடர்ச்சியாக மண் பரிசோதனை அடிப்படையில் உரமிடும் தொழில்நுட்பத்தை கடைபிடிக்கும் விவசாயிகளான நாமகிரிப்பேட்டை வட்டாரத்தைச் சார்ந்த திரு. என். கோவிந்தசாமி மற்றும் திருச்செங்கோடு வட்டாரத்தைச் சார்ந்த திரு. ஆர். குப்புசாமி அவர்கள் தங்களுடைய கருத்துக்களை மற்ற விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர்கள். இத்துடன் மண் மற்றும் நீர் பரிசோதனையின் முக்கியத்துவங்கள், மண்வள மேம்பாட்டு உத்திகள் குறித்த தொழில்நுட்ப உரையும் வழங்கப்பட்டது. மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள் மற்றும் தாவரக்கழிவுகளை மட்கு உரமாக்குதல் குறித்த செயல் விளக்கமும் பசுந்தாள் பயிரிடப்பட்ட மாதிரி பண்ணைகளும் காண்பிக்கப்பட்டது. மண்வள மேம்பாட்டு உத்திகள் அடங்கிய கண்காட்சியினை வேளாண்மை அறிவியல் நிலையம் அமைத்திருந்தது. அதில் இந்திய பொட்டாஷ் நிறுவனம் உரவகைகளையும், மகிழ் பயோ கேர் ப்ராக்ட்ஸ் நிறுவனம் உப்புநீரை சுத்திகரிக்கும் உபகரணங்களையும் வைத்திருந்தது. மொத்தமாக 237 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**அறிவியல் ரீதியான வெள்ளாடு வளர்ப்பு குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி**



அட்மா திட்ட நிதியுதவியுடன் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த 08.10.2018 முதல் 13.10.2018 ஆறு நாட்கள் கொண்ட பயிற்சியாக அறிவியல் ரீதியான வெள்ளாடு வளர்ப்பு என்ற தலைப்பில் திறன் மேம்பாட்டு பயிற்சியினை 28 ஊரக இளைஞர்களுக்காக நடத்தியது. முதல் நாள் வகுப்பில் ஆடுகளின் வகைகள் ஆடுகளை தேர்வு செய்தல், பல் பார்த்து வயதை கணக்கிடல் ஆகிய தலைப்புகளில் தொழில்நுட்ப உரை எடுத்துரைக்கப்பட்டது. தீவன வளர்பிற்கேற்ற மண்வகைகள், கழிவு மேலாண்மை சம்பந்தமான தொழில்நுட்ப உரையும், அறிவியல் ரீதியான வெள்ளாடு வளர்ப்பு சம்பந்தமான தொழில்நுட்பங்களை அறிய நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பண்ணை பயிலக வளாகத்திற்கு அழைத்து செல்லப்பட்டு மாதிரி பண்ணைகளும் இரண்டாம் நாள் வகுப்பில் காண்பிக்கப்பட்டது. மூன்றாம் நாள் வகுப்பில் ஆடுகளுக்கான தீவன மேலாண்மை, குடில் பராமரிப்பு, பசுந்தீவன விதை உற்பத்தி, அசோலா வளர்ப்பு முறைகள் மற்றும் குட்டிகள் பராமரிப்பு குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. நோய் மேலாண்மை, ஒட்டுண்ணிகள் மற்றும் தடுப்பு முறைகள், மூலிகை மருத்துவம் குறித்து நான்காம் நாள் வகுப்பில் எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் குடற்புழு நீக்கம் குறித்த செயல்முறை பயிற்சியும் இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டது. ஐந்தாம் நாள் வகுப்பில் சொந்த தொழில் தொடங்குவதற்கான நிதியறிக்கைப் பற்றியும், 2018 ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்புத் துறையிலுள்ள திட்டங்கள், ஆடுகளை கொண்டு ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தல் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. கடைசிநாள் வகுப்பில் குட்டிகள் மேலாண்மை, மதிப்பூட்டிய இறைச்சிப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து தொழில்நுட்ப உரைகளும், அடர் தீவனம் மற்றும் மதிப்பூட்டிய இறைச்சிப்

பொருட்கள் தயாரித்தல் குறித்த செயல்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் வெள்ளாடு வளர்ப்பு புத்தகமும், தாதுஉப்பு கட்டியும் வழங்கப்பட்டு பயிற்சிக்கான சான்றிதழ்களும் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது.

**தேசிய பண்ணை மகளிர் தின விழா 2018**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் தேசிய பண்ணை மகளிர் தின விழா 2018 நிகழ்ச்சியினை வேளாண்மை அறிவியல் நிலைய தத்தெடுப்பு கிராமமான மூலக்காடு கிராமத்தில் 15.10.2018 அன்று 150 விவசாய பெண்மணிகளைக் கொண்டு நடத்தியது. விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்களை வெற்றிகரமாக செய்துவரும் 12 விவசாய பெண்மணிகள் அவர்களது செயல்களை பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களது செயல்பாடுகள் மற்ற விவசாய பெண்மணிகளுடன் பகிர்ந்து கொண்டனர்கள். பொதிகை தொலைக்காட்சியிலும் அவர்களது பணிகள் பதிவுச் செய்யப்பட்டது. மேலும் நலிவடைந்த பெண்மணிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு நான்கு பெண்மணிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரமும், 2 பெண்மணிகளுக்கு தெளிப்பு நீர் பாசன வசதிகளும் மற்றும் 1 பெண்மணிக்கு கறவை மாடும் வழங்கப்பட்டது.

நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் செல்வி. சி. மாலதி அவர்கள் சேலம் வட்டார யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கி உதவிப் பொது மேலாளர் திரு. ஈ. புல்லாராவ் அவர்கள், பத்ரா ஏஜென்சீஸ் உரிமையாளர் திருமதி. பி. நிர்மலா அவர்கள், சனு இண்டர்நேஷனல் ஹோட்டல் உரிமையாளர் திருமதி கமலவேணி சத்தியமூர்த்தி அவர்கள் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு விவசாய பெண்மணிகளுடன் கலந்துரையாடினார்கள்.

நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் ஊரக வளர்ச்சித் துறையிலுள்ள திட்டங்கள் மற்றும் பணிகள் மற்றும் பயன்பாடு குறித்தும், யூனியன் வங்கி மேலாளர் சுயஉதவிக்குழுக்கள் பற்றியும் வங்கியில் கடனுதவி திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்கள். விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்குதல் குறித்த தொழில்நுட்பங்கள் கண்காட்சி விவசாயிகளின் பார்வைக்காக அமைக்கப்பட்டிருந்தது.

**உலக முட்டை தினம் - 2018**



உலக முட்டை தினம் 12.10.2018 அன்று நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 63 விவசாயிகளுடன் கொண்டாடப்பட்டது. முட்டையின் பயன்பாடுகள், முட்டையிலுள்ள சத்துக்களின் விபரங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டு முட்டையினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சியும் விவசாயிகளுக்கும் மற்றும் ஊரக இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. அறிவியல் தீதியான தீவன மேலாண்மை மற்றும் குஞ்சுப்பொரிப்பான் அடங்கிய தொழில்நுட்பங்களும் வழங்கப்பட்டது.

**நாட்டுக்கோழி வளர்ப்பதற்கான சிறப்புப் பயிற்சி**



இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் நிதியுதவியுடன் நாமக்கல் மாவட்டத்தில் புறக்கடை நாட்டுக்கோழியிலிருந்து தரமான முட்டைகளை உற்பத்தி செய்தல் குறித்த திட்டத்தின் கீழ் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கோழியின துறையின் மூலமாக நாட்டுக் கோழி வளர்பதற்கான இரண்டு தனிப்பயிற்சிகள் 22.11.2018 அன்றும் மற்றும் 20.12.2018 அன்றும் 55 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கோழி வளர்பதற்கான நவீன தொழில்நுட்பங்கள், தீவனம் தயாரிக்கும் முறைகள் தடுப்பூசி இடும் முறைகள் குறித்த செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. விவசாயிகள் அனைவரும் நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு கோழிப்பண்ணைகள் மற்றும் குஞ்சுப் பொறிப்பான் இடங்கள் காண்பிக்கப்பட்டது.

**உலக வெறிநோய் தினம் 2018**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் உலக வெறிநோய் தினம் 2018 நிகழ்ச்சியினை ஜம்புமடை கிராமத்தில் 01.10.2018 அன்று நடத்தியது. வெறிநாய்களினால் மனிதனுக்கு பரவக்கூடிய நோய்கள், தடுப்பூசி முறைகள், வெறிநாய்கள் தாக்கிய பின்பு போடக்கூடிய தடுப்பூசிகள் பற்றிய விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 60 விவசாயிகள் கலந்து கொண்டனர்கள்.

**விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்க தத்தெடுப்பு கிராமங்கள்**

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தத்தெடுப்பு கிராமங்களில் கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் 2018 வரை செயல்படுத்தப்பட்ட பணிகள் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**விழிப்புணர்வு முகாம்கள்**



வேளாண்மை அறிவியல் நிலையம் ஒண்டிக்கடை கிராமத்தில் 28.11.2018 அன்று 82 விவசாயிகளுக்கு நீடித்த நிலையான மானாவாரி விவசாய திட்டத்தின் பணிகள்

மற்றும் சாணவாயு எரிவாயு தயாரிக்கும் தொழிநுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக உயிர் எரிச்சக்தித்துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். புகழேந்தி அவர்கள் கலந்து கொண்டு சாணவாயு தொழில்நுட்பங்களின், முக்கியத்துவங்கள் மற்றும் பல்வேறு அரசு திட்டங்களிலுள்ள சாண எரிவாயு அமைப்பதற்கான நிதியுதவிகள் பற்றிய தொழில்நுட்ப உரை வழங்கி விவசாயிகளுடன் கலந்துரையாடினார். ஒண்டிக்கடை கிராமத்திலிருந்து 11 விவசாயிகள் பல்கலைக்கழக எரிசக்தி நிதியுதவியுடன் சாண எரிவாயு கலன் அமைக்க பெயர் பதிவு செய்துள்ளனர்கள்.

**முதன் நிலை செயல் விளக்கங்கள்**

ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறையில் அதிக மகசூல் தரும் நிலக்கடலை இரகம் (ஜி.ஜே.ஜீ. 9) கொண்ட செயல்விளக்கம் மூலக்காடு கிராமத்தில் காரீப் 2018 - 19ல் செய்யப்பட்டது. அதில் நிலக்கடலை செயல் விளக்க இரகம் மற்ற இரங்களை விட அதிக மகசூல் தந்தது கண்டறியப்பட்டுள்ளது. நிலக்கடலையின் மகசூல் எக்டருக்கு 1252 கிலோவும், நிகர இலாபம் எக்டருக்கு ரூ. 46388 மற்றும் வரவு - செலவு விகிதம் 2.29 ஆகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. கணபதிபாளையத்தில் வாழையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையில் தட்டைப்பயிரை ஊடுபயிராக கொண் செயல்விளக்கமும், ஒண்டிக்கடையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறையில் பெரிய வெங்காய இரகம் அர்கா பீம் மற்றும் பீன்ஸ் இரகம் அர்கா ஷரத் கொண்ட செயல்விளக்கமும், கணபதிபாளையத்தில் கறவைமாடுகளுக்கு முருங்கை இலையை புரதசத்துக்காக உணவாக பயன்படுத்தும் முறையும், மூலக்காட்டில் ஆடுகளுக்கு பட்டுப்புழு செடியின் இலையை உணவாக பயன்படுத்தும் செயல்முறை விளக்கமும் நடைமுறையில் உள்ளது. இத்துடன் கறவைமாடுகளில் மடிவீக்க நோயை கட்டுப்படுத்தும் மேஸ்டிகார்டு அடங்கிய தொழில்நுட்பம் கொண்ட செயல்முறை விளக்கமும், தொடர்ச்சியாக சினைப்பிடிக்காமல் இருக்கும் கறவை மாடுகளில் சினைப்பிடிப்பு திறனை அதிகரிக்க மூலிகை மருத்துவம் அடங்கிய செயல் விளக்கமும் மூலக்காடு மற்றும் ஒண்டிக்கடை கிராமத்தில் நடைமுறையில் உள்ளது.

**வயல்வெளி பரிசோதனை**

கணபதிபாளையம் மற்றும் மூலக்காடு கிராமங்களில் தாவரக் கழிவுகளை மட்கவைக்க பயன்படும் பல்வேறு கூட்டுநுண்ணுயிர்க்கலவையின் செயல்பாட்டினை கண்டறிதல், ஒண்டிக்கடை கிராமத்தில் பீர்க்கன்காய் இரகத்தின் செயல்பாட்டை அறிதல் மூலக்காடு மற்றும் ஒண்டிக்கடை கிராமத்தில் ஆடுகளில் உள்ள குடல்புழுக்களை நீக்க பயன்படும் மூலிகை மருத்துவத்தின் பலனை அறியும் பரிசோதனையும் நடைமுறையில் உள்ளது.

**ஒருங்கிணைந்த பண்ணையம்**

மூலக்காடு கிராமத்தில் 1 எக்டர் பரப்பளவில் ஒருங்கிணைந்த பண்ணைய மாதிரி அமைக்கப்பட்டுள்ளது. பலதரப்பட்ட பசுந்தீவன விதைகளை கொண்டு பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு கால்நடைகளுக்கு வழங்கப்படுகின்றது. வேளாண்மைத்துறை நிதியுதவியுடன் தேனீப்பெட்டியும் வழங்கப்பட்டுள்ளது.



**மண் மற்றும் நீர் வள அட்டை விபரம்**

51 மண் வள அட்டைகளும் 45 நீர்வள அட்டைகளும் ஒண்டிக்கடை மற்றும் மூலக்காடு கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு மேலாண்மை உத்திகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் பண்ணைப்பள்ளி**

பூச்சிக்கொல்லி மருந்தில்லா மிளகாய் உற்பத்தி என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளி ஒண்டிக்கடை கிராமத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரை ஏழு வகுப்புகள் முடிவடைந்துள்ளது.

**வயல் விழா**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் வயல்வெளி பரிசோதனையின் முடிவில் வயல் விழா கோக்கலை கிராமத்தில் 28.11.2018 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆமணக்கு இரகங்களான டி.சி.எச். 177, டி.சி.எச். 51 மற்றும் ஒ.ஆர்.சி.எச். 1 இரகங்களின் வளர்ச்சி, செடியிலுள்ள ஆமணக்கு விதைகளின் எண்ணிக்கை மற்றும் எடை கணக்கிடப்பட்டது. விவசாயிகளின் கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டு முடிவில் ஆமணக்கு இரகம் டி.சி.எச். 519 இரகம் அதிக மகசூலாக எக்டருக்கு 1325 கிலோவும், ஒ.ஆர்.சி.எச். 1 இரகம் எக்டருக்கு 1305 கிலோவும், டி.சி.எச். 177 இரகம் எக்டருக்கு 1024 கிலோவும் தந்தது கண்டறியப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி முனைவர் ந. அகிலா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு. பெ. அசோகன், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி முனைவர் கதிர்வேலன் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப்பேராசிரியர் முனைவர் பெ. முருகன் அவர்களுடன் வயல்வெளி ஆய்வு மேற்கொள்ளாத மற்ற விவசாயிகளும் கலந்து கொண்டு நாமக்கல் மாவட்டத்திற்கு ஏற்ற ஆமணக்கு இரகங்களை கண்டறிந்தனர்கள். இவ்விழாவில் ஆமணக்கு இரகங்கள் பற்றியும், பயிர் மேலாண்மை முறைகள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பாதுகாப்பாக பயன்படுத்தும் முறைகளும் எடுத்துரைக்கப்பட்டது.

**ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம்**

ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் 29.10.2018 முதல் 03.11.2018 வரை ஊழலற்ற இந்தியா உருவாக வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

உறுதிமொழி ஏற்பும், விவசாயிகளிடையே ஊழல் பற்றி பேச்சுப் போட்டியும் நடத்தப்பட்டு சிறப்பாக பேசிய விவசாயிகளை கௌரவித்தல் நிகழ்ச்சியும் மேற்கொள்ளப்பட்டது.



### உலக மீன்வள தினம் - 2018

உலக மீன்வளம் தினம் 21.11.2018 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 76 விவசாயிகளை கொண்டு நடத்தப்பட்டது. மீன்வளத் துறையின் வளர்ச்சி, மீன் வகைகள், நாமக்கல் மாவட்டத்திற்கேற்ற மீன் வளர்ப்பு முறைகள், ஏரி, ஆறு மற்றும் குட்டைகளில் மீன் வளர்ப்பு முறைகள், மீனில் உள்ள சத்துக்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.



### உள்ளிடப்பயிற்சிகள்

கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் 2018 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் 19 உள்ளிடப்பயிற்சிகளை 688 விவசாயிகளுக்கு வழங்கியது. ஒருங்கிணைந்த பண்ணையம், மண்புழு உரம் தயாரித்தல், அடர் சாகுபடி நடவு முறைகள், பழ மற்றும் காய்கறி சாகுபடி குறிப்புகள், மட்கு உரம் தயாரித்தல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், மரவள்ளி மற்றும் காய்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, ஆடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, மீன் மற்றும் இறால் வளர்ப்பு, நண்டு வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.



### வெளியிடப்பயிற்சிகள்

கால சூழ்நிலைகள் மற்றும் விவசாயிகளின் தேவைக்கேற்ப 13 வெளியிடப்பயிற்சிகள் 422 விவசாயிகளை கொண்டு விவசாய நிலங்களில் வேளாண்மை அறிவியல் நிலையம் நடத்தியது. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, மீன் வள துறையிலுள்ள முக்கிய பிரச்சினைகள் மற்றும் திர்வுகளும் குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்பட்டது.



### மாதாந்திர மண்டல பணிமனைக் கூட்டம்

கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் 2018 வரை மாதாந்திமர மண்டல பணிமனைக் கூட்டம் 09.10.2018, 13.11.2018 மற்றும் 11.12.2018 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 106 வேளாண்துறையை சார்ந்த களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பல்வேறு வட்டாரங்களிலுள்ள பிரச்சினைகள் குறித்தும் அதற்கேற்ற தீர்வுகளும் விவாதிக்கப்பட்டது.



### மண் மற்றும் நீர் பரிசோதனை மற்றும் மண் வள அட்டை வழங்குதல்

வேளாண்மை அறிவியல் நிலையம் அக்டோபர் முதல் டிசம்பர் 2018 வரை 104 மண் மாதிரிகளும் 58 நீர் மாதிரிகளும் விவசாயிகளிடமிருந்து பெற்று பரிசோதனை மேற்கொண்டது. ஆய்வின் முடிவில் 104 மண்வள அட்டைகளும் 58 பாசன நீர் வள அட்டைகளும் பரிந்துரைகளுடன் வழங்கப்பட்டது. மண் வளத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தை கடைப்பிடிக்க வலியுறுத்தப்பட்டது.



### கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்

கடந்த செப்டம்பர் முதல் டிசம்பர் 2018 வரை 819 விவசாயிகளும் மற்றும் மாணவர்களும் மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டார்கள். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் மாதிரி திடல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்புகேற்ற பண்ணைகள் பற்றிய செயல்விளக்கமும், பயிற்சி சம்பந்தமான தொழில்நுட்ப உரையும் வழங்கப்பட்டது. மேலும் நிக்ரா திட்ட கிராமங்களிலிருந்து 38 விவசாயிகள் மேச்சேரியிலுள்ள பொட்டனேரி ஆடு வளர்ப்பு நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு ஆடு வளர்ப்பிலுள்ள புதிய தொழில்நுட்பங்கள் அறிந்து கொண்டனர்.



### உள் மாநிலங்களிடையேயான கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்

நாமக்கல் மாவட்டத்திலிருந்து 4 விவசாயிகள் உத்திரபிரதேசத்திலுள்ள லக்னோவிற்கு 05.10.2018 முதல் 07.10.2018 வரை நடைபெற்ற உலகளாவிய அறிவியல் தொழில்நுட்ப விழாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு கிராம அளவில் அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டு நிலை குறித்த கண்காட்சி காண்பிக்கப்பட்டது.

நிக்ரா திட்ட கிராமங்களிலிருந்து 12 விவசாயிகள் கடந்த 09.10.2018 முதல் 10.10.2018 வரை பெங்களூரு மாநிலத்திற்கு 2 நாள் பட்டறிவு பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். செப்டம்பர் 9-ஆம் தேதியன்று தும்கூரிலுள்ள வேளாண்மை அறிவியல் நிலைய இயற்கை வள மேம்பாடு

உத்திகள் காண்பிக்கப்பட்டது. மண் மற்றும் நீர் சேமிப்பிற்கான வரப்பு அமைக்கும் உத்திகள், ஆழ்குழாய் கிணற்றில் நீர் பிடிப்புத்திறனை அதிகரிக்கும் உத்திகள், பண்ணைக் குட்டைகளில் நீர் சேமிக்கும் திறனை அதிகரிக்க சிமெண்ட் தடவிய சணல் சாக்குகளை அமைக்கும் உத்திகள், மானாவாரியில் பழ சாகுபடி குறிப்புகள், ஆடுகளின் தீவனத்திற்காகவும் மற்றும் மர விற்பனைக்காவும் வரப்புகளில் மலைவேம்பு நடுதல், ஊடுபயிர் சாகுபடி, மானாவரிக்கேற்ற கலப்பு காய்கறி சாகுபடிகள், சாமந்தி மற்றும் சைனா ஆஸ்டர் மலர் சாகுபடி குறிப்புகளை அறிந்து கொண்டனர். வெள்ளாடு வகைகள், மதிப்பூட்டிய நெல்லி தயாரித்தல் ஆகிய தொழில்நுட்பங்களை நிக்ரா திட்ட கிராமமான நாஹேனஹல்லி மற்றும் தங்கனஹல்லி கிராமங்களிலும் வேளாண்மை அறிவியல் நிலைய மாதிரி திடல்களையும் பார்வையிட்டனர்கள்.



10.10.2018 அன்று பெங்களூரு ஹசர்கட்டாவிலுள்ள இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு நுண்ணீர் பாசன முறைகள், மண் மூடாக்குகள் வீரிய இரக காய்கறி சாகுபடி குறிப்புகள், பழ மரங்களிடையே ஊடு பயிர் செய்யும் முறைகள், அடர் சாகுபடி குறிப்புகள், மலர் மற்றும் காய்கறி உற்பத்தி ஆகியன காண்பிக்கப்பட்டது.

**வாழை சாகுபடியில் நுண்ணுட்டங்கலவையின் பயன்பாடு - வெற்றி அனுபவம்**



1. பெயர் மற்றும் முகவரி :

   திரு. ஆர். செல்வராஜ் த/பெ. ராமசாமி,
   கங்காநாயக்கன்பட்டி,
   மோகனூர், நாமக்கல் - 637 012.
   அலைபேசி எண் : 97882 96009

2. பண்ணை விபரம் :
   5 ஏக்கரில் வாழை சாகுபடி

3. ஆண்டு வருமானம் :
   ஆண்டு நிகர வருமானம் எக்டருக்கு ரூ. 2.20 இலட்சம்

4. வேளாண்மை அறிவியல் நிலைய அறிமுகத்திற்கு முன்பு கடைபிடித்து வந்த தொழில்நுட்பங்கள்

   ❖ மண் பரிசோதனை செய்யாமல் உரங்களை இடுதல்.

   ❖ அளவுக்கு அதிகமான பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளித்தல்.

5. வேளாண்மை அறிவியல் நிலைய அறிமுகத்திற்கு பின்பு கடைப்பிடித்து வரும் தொழில்நுட்பங்கள்

   ❖ மண் ஊட்டமாக உயிர் உரங்கள் (அசோஸ்பைரில்லம் + பாஸ்போபாக்டீரியா) மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் (சூடோமோனாஸ்) இடுதல்.

   ❖ மண் பரிசோதனை அடிப்படையில் உரப்பாசனம் செய்தல். இலை வழியாக இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவன வாழை வளர்ச்சியூக்கி லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் தெளிப்பு செய்தல்.

   ❖ தேவைகேற்ற பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளித்தல்.

6. ஆராய்ச்சி முடிவுகள்

   ❖ இலைவழியாக வாழை வளர்ச்சியூக்கியை ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறையுடன் தெளிக்கும் போது வாழைத்தாரிலுள்ள சீப்புகளின் எண்ணிக்கை 10.35 ஆகவும், தாரின் எடை 25.5 கிலோவாகவும் மொத்த மகசூலானது எக்டருக்கு 34.72 டன்னும் இருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது.

   ❖ விவசாயியின் முறையை விட 20 சதவீத மகசூல் அதிகரிப்பும், நிகர இலாபமாக எக்டருக்கு ரூ. 2,20,184 -ம் வரவு - செலவு விகிதம் 2.65 -ம் விவசாயிகளின் முறையின் நிகர இலாபமாக ரூ. 1,12,857 -ம், வரவு - செலவு விகிதம் 1.87 ம் இருப்பது அறியப்பட்டுள்ளது.

7. ஆராய்ச்சியின் வெளியீடு

   ❖ வாழை வளர்ச்சியூக்கி தெளிக்கும் வாழைத்தாரின் எடை, சீப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்து தாரின் மொத்த எடை அதிகரிப்பதால் விவசாயிகள் சராசரியாக ஒரு தாருக்கு ரூ. 75 வீதம் இலாபம் பெறுகிறார்கள். அருகிலுள்ள விவசாயிகளும் தற்போது இந்த தொழில்நுட்பத்தை கடைபிடித்து வருகிறார்கள்.

8. ஆராய்ச்சியின் விளைவு

   ❖ 2016 முதல் இத்தொழில்நுட்பத்தை கடைபிடித்து வருதல்.

   ❖ கங்காநாயக்கன்பட்டி, சின்னத்தம்பிபாளையம், செவிட்டுரங்கன்பட்டி ஆகிய கிராமங்களில் 18 விவசாயிகளால் 56 எக்டர் நிலப்பரப்பளவில் வாழை வளர்ச்சியூக்கி தெளித்தல் கடைபிடித்து வரப்படுகின்றது.


**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலைய வளாகம்
நாமக்கல் - 637 002


ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல்

பெறுநர்

திரு./ திருமதி. ________________________

________________________

அனுப்புநர் ________________________

முதுநிலை விஞ்ஞானி, பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
நாமக்கல் - 637 002